புதுச்சேரி அரசு
துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **10 அக்டோபர், 2021**

## பத்திரிகை செய்தி

மதுரையில் இன்று(10-10-2021) நடைபெற்ற, உலக கலை மற்றும் விளையாட்டு கூட்டு அமைப்பு & தீனதயாள் சேவை மையம் இணைந்து நடத்தும் தென் மாவட்ட அளவிலான சிலம்பாட்ட போட்டி பரிசளிப்பு விழாவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் G.R. சாமிநாதன், தமிழ்நாடு தொழில் வர்த்தகச் சங்கத்தின் மதுரைக் கிளைத் தலைவர் திரு N. ஜெகதீசன் ஆகியோர் உடனிருந்தனர். விழாவில் பேசிய துணைநிலை ஆளுநர்,

- சிலம்பம் என்பது தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று. பிற்காலத்தில் அது தற்காப்புக் கலையாக வளர்ந்தது.
- பொதுவாகவே தற்காப்பு கலை என்பது பழங்காலத்தில் மக்கள் சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்களிடம் இருந்தும் எதிரிகளிடமிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள கையாண்ட வீர விளையாட்டாக இருந்தது.
- ஆண்களுக்கு நிகராக இன்று பெண்களும் சிலம்பம் தற்காப்பு கலையை கற்று விளையாடி வருகிறார்கள் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. பெண்குழந்தைகளுக்கு தற்காப்புக் கலையாக சிலம்பம் கற்றுத் தர வேண்டும்.
- நம்முடைய முன்னோர்கள் ஆயுதம் ஏந்தி போராடத் தொடங்கிய காலத்தில் முதன் முதலாக எடுத்த ஆயுதம் கம்பு. அதுவே இன்று சிலம்பக் கலையாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. தற்போது ஒரு வீர விளையாட்டாக விளையாட்டுப் போட்டிகளிலும் கூட சேர்க்கப்பட்டிருக்கிறது. பள்ளிகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பள்ளிக் கல்வியில் ஒரு பாடமாக சிலம்பத்தை சேர்க்க வேண்டும்.
- சிலம்பம் ஆடும் முறைகளுக்கு ஏற்ப பெயர்கள் சொல்லப்படுகிறது. இதையெல்லாம் பார்க்கும்போது எந்த அளவிற்கு தமிழர்கள் இந்த சிலம்பக் கலையை ஆர்வத்தோடு பயின்றார்கள் என்று தெரிகிறது.
- சிலம்பம் ஆடுவதற்கு உடல்தகுதி அடிப்படையானது. அந்தவகையில் சிலம்பாட்டம் ஒரு சிறந்த உடற்பயிற்சி முறையாகவும் இருக்கிறது. உடலின் வலிமை. ஆற்றல், விரைவுத் திறன், உடல் வளைவுத் தன்மை (Flexibility) எல்லாவற்றுக்கும் சிலம்பப் பயிற்சி உதவுகிறது.